


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 316 | 4 Pages | 11.6.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 316 | 4 பக்கங்கள் | 11.6.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்**

**விளக்கம்:** இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடையதீமையையும்நன்மையையும் மறந்து விடுதலாகும்.

## 2047 பற்றிய கனவுகளை மோடி அரசு விற்க ஆரம்பித்துவிட்டது ராகுல் காந்தி



புதுடெல்லி, ஜூன் 11

மும்பையில் ரெயிலில் இருந்து விழுந்து பலர் உயிரிழந்த சம்பவம் நாட்டின் யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;

"மோடி அரசாங்கம் 11 ஆண்டுகால 'சேவையை' கொண்டாடும் அதே வேளையில், மும்பையில் ரெயிலில் இருந்து விழுந்து பலர் உயிரிழந்ததாக வரும் துயரச் செய்திகள் நாட்டின் யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு முதுகெலும்பாக உள்ள இந்திய ரெயில்வே, இன்று அது பாதுகாப்பின்மை, நெரிசல் மற்றும் குழப்பத்தின் அடையாளமாக மாறியுள்ளது.

மோடி அரசாங்கத்தின் 11 ஆண்டுகால ஆட்சியில் பொறுப்புக்கூறல் இல்லை, மாற்றம் இல்லை, பிரசாரம் மட்டுமே உள்ளது. மோடி அரசாங்கம் 2025 பற்றி பேசுவதை நிறுத்திவிட்டு, இப்போது 2047 பற்றிய கனவுகளை விற்க ஆரம்பித்துவிட்டது.

இன்று நாடு எதை எதிர்கொள்கிறது என்பதை யார் பார்ப்பார்கள்? ரெயிலில் இருந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய விரும்புகிறேன்."

இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

## பெங்களூரு கூட்ட நெரிசல் விவகாரம்; சஸ்பெண்ட் ஆன ஐ.பி.எஸ். அதிகாரி மத்திய அரசிடம் மேல்முறையீடு



பெங்களூரு, ஜூன் 11

18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் வெற்றி பெற்று முதல் முறையாக கோப்பையை கைப்பற்றிய ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்.சி.பி.) அணியினருக்கு சின்னசாமி கிரிக்கெட் ஸ்டேடியத்தில் பாராட்டு விழா நடந்தது. இதை காண ரசிகர்களுக்கு இலவச அனுமதி அளிக்கப்பட்டது. லட்சக்கணக்கான ரசிகர்கள் குவிந்ததால் அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டு 5 பெண்கள், 6 ஆண்கள் என மொத்தம் 11 பேர் உயிரிழந்தனர். 56 பேர் காயம் அடைந்தனர்.


இந்த துயரசம்பவத்துக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாததும், அவசரம், அவசரமாக விழாவை நடத்தியதும்தான் காரணம் என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் இதே குற்றச்சாட்டை முன்வைத்துள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக கர்நாடக அரசு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. விசாரணை அதிகாரியாக பெங்களூரு கலெக்டர் ஜெகதீஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்ய மாநில மந்திரிசபை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. அதன்பேரில் பெங்களூரு போலீஸ் கமிஷனர் தயானந்த், மத்திய மண்டல துணை போலீஸ் கமிஷனர் சேகர், உதவி போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணா, கப்பன்பார்க் போலீஸ் இன்ஸ்பெக்டர் கிரீஷ் உள்பட 5 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், பெங்களூரு கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக சஸ்பெண் செய்யப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி விகாஸ் குமார், தன் மீதான நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யக்கோரி மத்திய நிர்வாக தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்துள்ளார். அவர் தனது மனுவில், விசாரணை முறைகேடாக நடைபெற்றதாகவும், தன்னிடம் எந்த விசாரணையும் நடத்தாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விகாஸ் குமார் தெரிவித்துள்ளார்.

எனவே, தன் மீதான நடவடிக்கையை ரத்து செய்து, மீண்டும் தன்னை பணியில் அமர்த்த வேண்டும் என விகாஸ் குமார் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார். விகாஸ் குமாரின் மனு மீது மத்திய நிர்வாக தீர்ப்பாயம் விரைவில் விசாரணை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆக்சியம்4 விண்கலம் இன்று ஒத்திவைப்பு



நாசா, இஸ்ரோ முயற்சியில் சர்வதேச விண்வெளி மையத்திற்கு விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்லும் ஆக்சியம்4 திட்டம் ஆகும்.

புதுடெல்லி,

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஆக்சியம் ஸ்பேஸ் என்னும் தனியார் நிறுவனத்தின் ஆக்சியம் 4 நான்காவது மனித விண்வெளி பயணம் நாளை மறுநாள் ஜூன் 10ம் தேதி திட்டமிடப்பட இருந்தது. இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லா மற்றும் 3 விண்வெளி வீரர்கள் என மொத்தம் 4 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தநிலையில், வானிலை காரணமாக ஆக்சியம்4 விண்கலம் ஏவுவது ஜூன் 11ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. நாசா, இஸ்ரோ முயற்சியில் சர்வதேச விண்வெளி மையத்திற்கு விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்லும் ஆக்சியம்4 திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விண்வெளி வீரர் சுக்லாவுடன், அமெரிக்காவை சேர்ந்த மிஷன் கமாண்டர் பெக்கி விட்சன் மற்றும் ஹங்கேரியை சேர்ந்த விண்வெளி நிபுணர் திபோர் கபு மற்றும் போலந்தை சேர்ந்த ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி ஆகியோரும் செல்கின்றனர்.

கடந்த 1984ம் ஆண்டு ரஷ்யாவின் சோயுஸ் விண்வெளி பயணத்தில் இணைந்த ராகேஷ் சர்மாவின் வரலாற்று சிறப்புமிக்க விண்வெளி பயணத்திற்கு பின் 41 ஆண்டுகள் கழித்து ஆக்சியம் 4 திட்டத்தில் விண்வெளிக்கு செல்லும் இரண்டாவது இந்தியர் உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த சுக்லா என்பது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அணையை திறக்க சேலம் வருகை 11 கிலோமீட்டர் தூரத்திற்கு இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ

சேலம்

மேட்டூர் அணை திறக்க இன்று (11ம்தேதி) சேலம் வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், 11 கிலோமீட்டர் தூரம் ரோடுஷோ முறையில் பொதுமக்கள், தொண்டர்களை சந்திக்கிறார். காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து வரும் 12ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தண்ணீர் திறந்து வைக்கிறார். தொடர்ந்து, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடக்கும் அரசு விழாவில் கலந்து கொண்டு, சுமார் ஒரு லட்சம் பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். இந்த விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது. இதனிடையே சேலம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில், சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:



காவிரி டெல்டாபாசனவிவசாயிகளுக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க முதல்வர் மு.க.ஸ்டாலின்11ம்தேதி(இன்று) சேலம் வருகிறார். முன்னதாக, ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் இருந்து வரும் அவருக்கு, சேலம் மாவட்ட எல்லையான பவானிமேட்டூர் ரோடு நவப்பட்டி பெரும்பள்ளம் என்ற இடத்தில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. பின்னர் தனியார் மண்டபத்தில் கட்சி நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடுகிறார்.

தொடர்ந்து அங்கிருந்து, மேட்டூர் வரை சுமார் 11 கிலோ மீட்டருக்கு ரோடுஷோ முறையில் பொதுமக்கள் மற்றும் தொண்டர்களை சந்திக்கிறார். அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொள்ளும் முதல்வர், அன்றிரவு மேட்டூர் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையில் தங்குகிறார். மறுநாள் 12ம் தேதி காலை 9.30 மணிக்கு மேட்டூர் அணையில் இருந்து டெல்டா விவசாயிகளுக்காக தண்ணீர் திறந்து வைக்கிறார். பின்னர் மேச்சேரி, ஓமலூர் வழியாக சேலம் வந்து அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்கிறார். இவ்விழாவில் ஆயிரக்கணக்கானோருக்கு வீட்டுமனை பட்டா உள்பட 1.01 லட்சம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மேலும் பல்வே று துறைகளின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், சேலம் மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறார். மதியஉணவிற்கு பிறகு சென்னை திரும்புகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒரே நாடு ஒரே தேர்தல் இது கூட்டாட்சி தத்துவம் கொண்ட நாடு ஆகையால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அகில இந்திய ஜனநாயக கட்சி தலைவர் கூறினார்

அகில இந்திய ஜனநாயக கிறிஸ்துவ மக்கள் கட்சியின் சார்பில் ராயபுரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது இதில் பல்வேறு தீர்மானங்கள் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

இதில் 500க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு அவர்களுக்கு அறுசுவை இருந்து வழங்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து செய்தியாளரை சந்தித்த கட்சியின் தலைவர் ஐசக் ஐயா கூறுகையில்

கடந்த 30 வருடங்களாக கிறிஸ்துவ ஜனநாயக கட்சியை நடத்தி கிறிஸ்துவ மக்களுக்கான இட ஒதுக்கீட்டை கேட்டு வருகிறோம்

இதில் தனித்து கிறிஸ்தவர்கள் மற்றும் ஆதிதிராவிடர் கிறிஸ்தவர்கள் மற்றும் தலித் கிறிஸ்தவர்கள் என இருந்தவர்களை கிறிஸ்தவர்களாக ஆகிய காரணத்திற்காக நீதிமன்றங்கள் அந்த பட்டியலில் இருந்து நீக்கிய



பிறகு அந்த இட ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீடை அப்படி இல்லை என்றால் தனி ஒதுக்கீடு அவர்களுக்கு கொடுக்கும் கட்சிகளோடு நாங்கள் கூட்டணி வைக்க உள்ளோம்

அதேபோல் எங்களுக்கும் ஆட்சி அதிகாரம் வேண்டும் நாங்கள் கடைசி வரையும் கை கட்டி நிக்க முடியாது நாங்களும் சட்டமன்றத்திற்கு சென்று எங்களுடைய கிறிஸ்தவ சமுதாயத்திற்கு தேவைகளை நாங்கள் கேட்டு பெறுவோம் அதற்கான காலமும் வந்துவிட்டது


ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொடுத்தால் எந்த கட்சியுடன் என்றும் கூட்டணி வைப்போம் அப்படி இல்லை என்றால் நாங்கள் ஆட்சி அதிகாரம் தருகிறோம் எங்களுடன் சேரும் கட்சியுடன் நாங்கள் கூட்டணி கட்சிகளை நாங்கள் வரவேற்போம்

கிறிஸ்துவ தேவாலயங்களுக்கு கடைகளுக்கு செலுத்தும் கமர்சியல் மின்சார கட்டணம் வசூலிக்கப்படுகிறது அவருக்கு பதிலாக 2c எனப்படும் மின்சார லைன்களை தமிழக அரசு செய்து தர வேண்டும்

கிறிஸ்துவ வாரியத்திற்கு மாவட்ட ரீதியில் ஆட்கள் போடப்பட வேண்டும் இதனால் நலத்திட்ட உதவிகள் தையல் மெஷின் போன்றவைகள் தரப்படாமல் ஏத்தி வைக்கப்படுகிறது அதனை அதனை பரிசினை செய்து மாவட்டம் ரீதியில் ஆட்களை போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்

ஒரே நாடு ஒரே தேர்தல் இது கூட்டாட்சி தத்துவம் கொண்ட நாடு ஆகையால் ஒரே தேர்தல் வராது மேலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது அந்தந்த சட்டமன்ற கால கட்டத்தில் புனித பிறகு அந்த தேர்தல் சட்டமன்றத்தில் நடக்கணும் ஒரே மொழி என்பது கிடையாது தமிழ் மொழி காலம் தொட்டு உலகம் தோன்றும் முன்பு வந்தது ஆகையால் நாங்கள் இங்கே ஏற்க மாட்டோம் என கூறினார்

## தமிழக மாநிலங்களவை தேர்தல்! 6 பேரும் போட்டியின்றி தேர்வாக வாய்ப்பு? டெல்லி அரசியலுக்குள் நுழையும் கமல்!



தமிழகத்தில் மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனுதாக்கல் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் அதிமுக, திமுக உள்பட 6 பேரும் போட்டியின்றி தேர்வாக வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது. கமல்ஹாசன் முதல் முறையாக டெல்லி அரசியலில் கால் பதிக்கிறார்.

தமிழகத்தில் மாநிலங்களவை உறுப்பினர்களாக உள்ள திமுகவின் வில்சன், தொமுச சண்முகம், புதுக்கோட்டை அப்துல்லா, அதிமுகவின் சந்திரசேகரன், மதிமுக வைகோ, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோரின் பதவிக்காலம் வரும் ஜூலை 24 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக மாநிலங்களவைத் தேர்தல் ஜூன் 19ஆம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் ஜூன் 2 ஆம் தேதி தொடங்கியது.

ஒரு எம்பியை 34 எம்எல்ஏக்கள் ஓட்டு போட்டு தேர்வு செய்வார்கள். அந்த வகையில் சட்டசபையில் பலத்தின் அடிப்படையில் திமுக 4 உறுப்பினர்களையும், அதிமுக 2 உறுப்பினர்களையும் தேர்வு செய்ய முடியும்.

அந்த வகையில் இந்த 6 இடங்களுக்கு யாரை நியமிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. அந்த வகையில் திமுக சார்பில் வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், சல்மா ஆகியோர் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

கடந்த மக்களவைத் தேர்தலில் செய்த ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு ராஜ்ய சபை சீட் ஒதுக்கப்பட்டது. அந்த இடத்தில் கமல் ஹாசன் போட்டியிடுகிறார். அதிமுக தரப்பில் இருந்து வழக்கறிஞர் அணி செயலாளர் இன்பதுரை, செங்கல்பட்டு மாவட்ட அதிமுக அவைத் தலைவர் தனபால் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த 6 பேரும் அண்மையில்தான் வேட்பு மனு தாக்கல் செய்தனர். நேற்றுடன் வேட்பு மனுதாக்கலுக்கான கால அவகாசம் முடிவடைந்தது. இதில் திமுக சார்பில் 3 பேரும், அதிமுக சார்பில் 2 பேரும் , மநீம சார்பில் ஒருவரும், சுயேச்சைகள் 7 என மனுதாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்கள் மீது இன்று பரிசீலனை நடைபெறுகிறது. ஜூன் 12 ஆம் தேதி வேட்புமனுக்களை திரும்ப பெற கடைசி நாளாகும். வேட்பு மனு பரிசீலனையில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் 10 சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும்.

திமுக தரப்பில் இருந்து வேட்புமனு நிராகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாக ஒவ்வொரு வேட்பாளரும் தலா இரண்டு வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். அந்த வகையில் திமுக, அதிமுக, மநீம வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஏற்கப்படும். எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இல்லாத காரணத்தால் இன்று வேட்புமனு பரிசீலனையின் போது சுயேச்சை வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும். மற்ற ஆறு உறுப்பினர்களும் போட்டியின்றி தேர்வாகவே அதிக வாய்ப்புகள் உள்ளன. இதனால் கமல்ஹாசன் முதல் முறையாக டெல்லி அரசியலுக்கு வருகிறார். மாநிலங்களவையில் மொத்தம் 245 எம்பிக்கள் உள்ளனர். அவர்களில் தமிழகத்திலிருந்து 18 பேர் மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்படுகிறது. இவர்களின் பதவிக் காலம் 6 ஆண்டுகளாகும்.

இந்த நிலையில் திமுக சார்பில் திருச்சி சிவா, என்.ஆர்.இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி சோமு, கல்யாணசுந்தரம், கேஆர்என் ராஜேஷ்குமார், கிரிராஜன், பி.வில்சன், சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் என 10 ராஜ்யசபா எம்பிக்கள் இருப்பார்கள்.

அதிமுக சார்பில் சி.வி.சண்முகம், தம்பிதுரை, தர்மர், இன்பதுரை, தனபால் என 5 உறுப்பினர்கள் இருப்பார்கள். மேலும் காங்கிரஸ் சார்பில்ப.சிதம்பரம், தமாக சார்பில் ஜி.கே.வாசன், மநீம சார்பில் கமல்ஹாசன் ஆகியோரும் உறுப்பினர்களாக இருப்பார்கள். மதிமுகவும், பாமகவும் மாநிலங்களவையில் தங்களது பிரதிநிதித்துவத்தை இழக்கின்றன. இதனால் அந்த இரு கட்சிகளின் தொண்டர்களும் கவலையடைந்துள்ளனர்.



# சென்னை மாநகராட்சியில் வேலை என ரூ.1.5 கோடி மோசடி

சென்னை, ஜூன் 11
சென்னை மாநகராட்சி ஆணையர் போல் போலியாக கையெழுத்திட்டு, மாநகராட்சி அலுவலகத்தில் வேலை வாங்கி தருவதாக மோசடி செய்த பா.ஜ.க முன்னாள்நிர்வாகிஜெயச்சந்திரன் உள்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

இதுவரை 22 நபர்களிடம் ரூ.1.5 கோடிக்கும் மேல் மோசடி செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தலைமறைமாக உள்ள லதா, கௌரி, வெங்கடேஷ் ஆகிய மேலும் மூவரை பெரியமேடு போலீசார் தேடி வருகின்றனர்.

# 3 பைக்குகள் மோதியதில் 2 வாலிபர்கள் பலி

ஊத்தங்கரை, ஜூன் 11
கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே பெரிய தள்ளப்பாடி பகுதியைச் சேர்ந்தவர் தென்னரசு(31). அரசு பஸ் தற்காலிக டிரைவர். நேற்று சிங்காரப்பேட்டையில் நடைபெற்ற காதணி விழாவில் பங்கேற்று விட்டு மாலை 3 மணியளவில் பைக்கில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். இதபோல், ஊத்தங்கரையில் உள்ள பேக்கரி கடை மாஸ்டரான வினோத்குமார்(24), நண்பர் ராஜசேகருடன்(30) பைக்கில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

இரு பைக்குகளும் திருப்பத்தூர்திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் குரங்குகல் மேடு என்னுமிடத்தில் நேருக்கு நேர் மோதின. இதில் தென்னரசு, வினோத்குமார் ஆகியோர் இறந்தனர். அவிபத்துக்குள்ளான பைக்குகள் மீது மற்றொரு பைக் மோதி சவுந்திரராஜன்(40) என்பவர் காயமடைந்தார்.

# தனுஷ்கோடி பகுதியில் ஆண் சடலம், ரசாயன மூட்டைகள் கரை ஒதுங்கியதால் பரபரப்பு




ராமேஸ்வரம், ஜூன் 11
ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி அச்சல் முனை இடையே தென்கடல் பகுதியில் வெள்ளை நிற மூட்டைகள் இன்று காலை கரை ஒதுங்கின. மீனவர்கள் அளித்த தகவலின்பேரில் மரைன் போலீசார் விரைந்து வந்து மூட்டைகளை கைப்பற்றி சோதனையிட்டனர். அதில், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படும் ரசாயன வேதிப்பொருள்கள் இருப்பது தெரியவந்தது.

கரை ஒதுங்கிய சில பார்சல்களை மரைன் போலீசார் கைப்பற்றினர். மேலும், அதே பகுதியில் அடையாளம் தெரியாத ஆண் சடலமும் கரை ஒதுங்கியது. சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராமேஸ்வரம் அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர் யார் என விசாரணையை தொடங்கியுள்ளனர். பார்சல் மற்றும் ஆண் சடலம் ஒருங்கே கரை ஒதுங்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்திய கடலோர காவல் படையினர் கடலில் ஆங்காங்கே ஒதுங்கியுள்ள பார்சல்களை கைப்பற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக மரைன் மற்றும் புலனாய்வு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் 24ம் தேதி கேரள மாநிலம் விழிஞ்ஞம் துறைமுகத்திலிருந்து கொச்சி சென்ற சரக்கு கப்பல் கடலில் மூழ்கியது. இதனால் கப்பலில் இருந்து வேதி பொருட்கள் அடங்கிய கண்டெய்னர்கள் கடலில் விழுந்தன. இந்த கண்டெய்னர்களில் இருந்த மூட்டைகள்தான் தனுஷ்கோடியில் கரை ஒதுங்கியுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாகவும்அல்லது இலங்கைக்கு கடத்தி செல்லப்பட்டவையா எனவும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திரையரங்குகளில் அதிக கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூன் 11
திரையரங்குகளில்அதிக கட்டணம் வசூலித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவு அளித்துள்ளது. ஓடிடியில்சினிமா பார்ப்பது அதிகரிப்பு; தியேட்டர்கள் வெகுகாலம் நீடிக்காது; உரிமையாளர்கள் சிந்திக்க வேண்டும்.

புதிய திரைப்படங்களுக்கு முதல் 4 நாட்கள் அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகமாக வசூல் என தொடரப்பட்ட வழக்கில் ஐகோர்ட் உத்தரவு அளித்துள்ளது.

# கிருஷ்ணகிரியில் கிராமத்துக்குள் நுழையும் யானைகளை விரட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ஆட்சியர்



கிருஷ்ணகிரி , ஜூன் 11
கிருஷ்ணகிரியில் கிராமத்துக்குள் நுழையும் யானைகளை விரட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். ஊருக்குள் நுழையும் யானைகளை தடுக்க நடவடிக்கை கோரி ஆட்சியர் அலுவலகம் முன்பு 200 விவசாயிகள் போராட்டம் நடத்தினர். கிருஷ்ணகிரி ஆட்சியர் உறுதி அளித்ததைஅடுத்து விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டனர்.

# ஏரிக்குள் பாய்ந்த அரசு பஸ்



போச்சம்பள்ளி, ஜூன் 11
கிருஷ்ணகிரியில் இருந்து அரசம்பட்டிக்கு அரசு டவுன் பஸ் நேற்று காலை புறப்பட்டது. காவேரிப்பட்டணம் வந்ததும், அங்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு நெடுங்கல் நோக்கி சென்றது. பஸ்சில் 20க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர். நெடுங்கல் ஏரிக்கரை அருகே சென்றபோது, திடீரென ஆக்சில் கட் ஆகி பஸ் தறிகெட்டு ஓடி ஏரிக்குள் பாய்ந்தது. பனை மரத்தின் பக்கவாட்டில் உரசியவாறு பஸ் கவிழ்ந்தது. அப்பகுதியினர் வந்து அனைவரையும் பத்திரமாக மீட்டனர்.

# நாமக்கல்லை நடுங்க வைத்த மூதாட்டி கொலை 4 தனிப்படை அமைப்பு



நாமக்கல், ஜூன் 11
நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தாலுகா, குளத்துப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சாமியாத்தாள் (வயது 67). இவர்களுக்கு கிருஷ்ணமூர்த்தி என்ற மகனும், கிருஷ்ணவேணி என்ற மகளும் உள்ளனர். இவரது கணவர் ராசப்பன், கடந்த 30 ஆண்டுக்கு முன்பு இறந்து விட்டார். குளத்துப்பாளையத்தில் உள்ள நிலத்தில் விவசாயம் பார்த்துக் கொண்டு சாமியாத்தாள் மட்டும் தனியாக தோட்டத்து வீட்டில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் உறவினர் வீட்டு திருமணத்திற்கு சென்று விட்டு இரவு 9 மணிக்கு மேல் வீடு திரும்பினார். வீட்டு வாசலில் கட்டில் போட்டு படுத்து தூங்கியுள்ளார். நள்ளிரவில் அங்கு வந்த மர்ம நபர்கள், சாமியாத்தாளை தட்டி எழுப்பி கத்தியை காட்டி வீட்டைத் திறந்து நகை பணத்தை எடுத்துக் கொடுக்கும்படி மிரட்டியுள்ளனர்.

இதனால் பயந்து போன சாமியாத்தாள் கூச்சலிட்டுள்ளார். இதனால், ஆத்திரமடைந்த மர்ம நபர்கள், சாமியாத்தாள் கழுத்து மற்றும் வாய் பகுதியில் சரமாரியாக குத்திவிட்டு அங்கிருந்து தப்பி சென்றனர். இதில், ரத்த வெள்ளத்தில் சரிந்த சாமியாத்தாள், செல்போன் மூலம் பக்கத்தில் உள்ள உறவினர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவர்கள்சாமியாத்தாளை மீட்டு கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு, அவர் பரிதாபமாக உயிரிழந்தார். தகவலறிந்த நல்லூர் போலீசார் வழக்குப்பதிவுசெய்துசம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் கொலையாளிகளை பிடிக்க பரமத்திவேலூர் டி.எஸ்.பி சங்கீதா தலைமையில் 4 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கொலை தொடர்பாக தோட்டத்துவீட்டிற்கு செல்லும் சாலையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து மர்ம நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 90 அடி கிணற்றில் டிராக்டருடன் விழுந்த சிறுவன் சடலமாக மீட்பு




ரிஷிவந்தியம், ஜூன் 11
கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம், மதுரா சிங்காரத்தோப்பு பகுதியை சேர்ந்தவர் பாஸ்கேல் (55). இவரது விவசாய நிலத்தில் உள்ள கிணற்றில் மின்மோட்டார் பழுதடைந்து இருந்தது. இதையடுத்து நேற்று முன்தினம் மதியம் 2.30 மணி அளவில் டிராக்டர் மூலம் கயிறு கட்டி மின் மோட்டாரை வெளியே எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது டிராக்டர் ஆப் செய்யப்படாமல் இயக்கத்திலேயே இருந்தது. பாஸ்கேலின்தம்பி மகன் ஜோன் இன்பராஜ்(28) மற்றும் ஜெரீஸ் (14), டேனிஷ்(7) ஆகிய 3 பேர் டிராக்டரில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தனர்.

திடீரென பின்னோக்கி வந்த டிராக்டர் கிணற்றுக்குள் கவிழ்ந்து விழுந்தது.

இதில் ஜோன் இன்பராஜ் மற்றும் ஜெரீஸ் நீச்சலடித்து தப்பினர். சிறுவன் டேனிஷ் டிராக்டருக்கு அடியில் சிக்கினான். 90 அடி கிணற்றில் 60 அடிக்கு தண்ணீர் இருந்த நிலையில் தீயணைப்பு துறை வீரர்கள் வந்து தண்ணீரை வெளியேற்றினர். மழை பெய்ததால் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணி அளவில் சிறுவன் டேனிஷ் சடலமாக மீட்கப்பட்டான். கவனக்குறைவாக டிராக்டரை இயக்கியதாக ஜோன் இன்பராஜ் மீது பகண்டை கூட்டு சாலை போலீசார் வழக்குப் பதிந்துள்ளனர். உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

# அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ. உயிரிழப்பு



கோயம்புத்தூர், ஜூன் 11
திருப்பூர்தெற்குதொகுதி அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரன். இவர் மாநில அம்மா பேரவை இணைச்செயலாளராகவும் செயல்பட்டு வந்தார்.

இதனிடையே, கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட குணசேகரன் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், குணசேகரன் இன்று காலை 8 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரனின் மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# ஊட்டி தாவரவியல் பூங்கா பெரணி இல்லம் மூடல்: சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்



ஊட்டி, ஜூன் 11
ஊட்டி தாவரவியல் பூங்கா பெரணி இல்லம் மீண்டும் மூடப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். சுற்றுலா நகரமான ஊட்டிக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டு தாவரவியல் பூங்காவில் பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அதில் மலர்கள் பூத்துக் குலுங்கும். மேலும், பல ஆயிரம் தொட்டிகளில் மலர்கள் நடவு செய்யப்பட்டு அவைகள் அனைத்தும் கண்ணாடி மாளிகையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது வழக்கம்.

இதுதவிர பூங்காவில் பல லட்சம் பெரணி செடிகள் வைக்கப்பட்டுள்ள பெரணி இல்லம் (கண்ணாடி மாளிகை) உள்ளது. இந்நிலையில் பெரணி இல்லம் வலுவிழந்து சேதம் அடைந்ததுடன், மேற்கூரைகளில் உள்ள கண்ணாடிகள் அவ்வப்போது விழுந்து வந்தன. சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி பெரணி இல்லம்மூடப்பட்டுசீரமைப்பு பணி நடந்தது. இந்த பணி கடந்த மார்ச் மாதம் துவங்கி மே மாதம் முடிவடைந்தது.

சீரமைப்பு பணிகள் முடிந்த நிலையில், இதனை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஊட்டி மலர்கண்காட்சி துவக்க நாளின் போது திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி பெரணி இல்லம் மீண்டும் மூடப்பட்டுள்ளது. அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

இதனால் பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணங்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றின் நீர்வரத்து குறைவு

ஒகேனக்கல், ஜூன் 11
தமிழககர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, கேரட்டி, நாட்றாம்பாளையம், ராசிமணல் உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நேற்று ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6,500 கன அடியாக வந்தது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை குறைந்தது. இந்த நிலையில் தற்போதைய நிலவரப்படி நீர்வரத்து 6,500 கன அடியில் இருந்து 6 ஆயிரம் கன அடியாக குறைந்து உள்ளது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ், ஐவர்பாணி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு உடை அணிந்து பாறைகளுக்கு இடையே காவிரி ஆற்றில் உற்சாகமாக பரிசல் சவாரி மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

# அரசு சேவை இல்லத்தில் மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த விவகாரத்தில் காவலாளிக்கு 15 நாள் நீதிமன்ற காவல்




செங்கல்பட்டு, ஜூன் 11
தாம்பரம் அரசு சேவை இல்லத்தில் 8ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த விவகாரத்தில் காவலாளிக்கு 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவு அளித்துள்ளது. கைதான காவலாளி மேத்யூவுக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல் விதித்து செங்கல்பட்டு மாவட்ட மகிளா நீதிமன்றம் உத்தரவு அளித்தது.

காவலாளி மேம்யூவை வரும் 23ம் தேதி வரை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

# வைகாசி விசாக திருவிழா: பழநி கோயிலில் தேரோட்டம்



பழநி, ஜூன் 11
பழநி முருகன் கோயில் வைகாசி விசாக திருவிழாவில் இன்று தேரோட்டம் நடைபெறுகிறது. இதையொட்டி ஏராளமான பக்தர்கள் குவிந்து வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டம், பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக் கோயிலில் நடைபெறும் முக்கிய திருவிழாக்களில் வைகாசி விசாகம் குறிப்பிடத்தக்கது. 10 நாட்கள் நடைபெறும் இவ்விழா இந்த ஆண்டு கடந்த ஜூன் 3ம் தேதி பெரியநாயகி அம்மன்கோயிலில் கொடியேற்றத்துடன் துவங்கியது.

விழா நாட்களில் வள்ளி – தெய்வானை சமேதரராக முத்துக்குமாரசுவாமி ரத வீதிகளில் தங்கமயில் வாகனம், தந்தப் பல்லக்கு, காமதேனு, ஆட்டுக்கிடா, சப்பரம், வெள்ளி யானை, வெள்ளி மயில், தங்க மயில் உள்ளிட்ட வாகனங்களில் உலா வரும் நிகழ்ச்சி நடந்து வருகிறது. ழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான திருக்கல்யாணம் நேற்றிரவு கோலாகலமாக நடந்தது. முன்னதாக வள்ளி – தெய்வானை சமேதரராக முத்துக்குமரசுவாமிக்கு 16 வகை சிறப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம் நடந்தது.

இரவு 8 மணியளவில் பக்தர்களின் அரோகரா கோஷங்கள் முழங்க கோயில் அர்ச்சக ஸ்தானீகர் அமிர்தலிங்கம் மற்றும் செல்வசுப்பிரமணியம் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மங்கல நாண் அணிவிக்கும் நிகழ்வை நடத்தினர். தொடர்ந்து மாலை மாற்றுதல், அப்பளம் உடைத்தல் போன்ற திருமண சடங்கு நிகழ்வுகள் நடந்தன. ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு தொடங்கி கோலாகலமாக நடைபெற உள்ளது. இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேரோட்ட விழாவையொட்டி பழநியில் அதிகளவில் பக்தர்கள் குவிவதால் நகரம் களைகட்டியுள்ளது.

# ஊட்டி அருகே நடுரோட்டில் கடமானை வேட்டையாடிய புலி



ஊட்டி, ஜூன் 11
ஊட்டி அருகே புலி ஒன்று கடமானை நடுரோட்டில் வேட்டையாடி இழுத்து சென்ற சம்பவம் கிராம மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. லகிரி மாவட்டம், ஊட்டி அருகே உள்ள மாயார், மசினகுடி, மாவனல்லா, பொக்காபுரம் உள்பட சுற்று வட்டார கிராமப்பகுதிகள் முதுமலை புலிகள் காப்பக பகுதியில் அமைந்துள்ளது. இக்கிராம பகுதிகளில் சமீப காலமாக புலிகள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. சமயங்களில் பகல் நேரங்களிலேயே புலிகள் சாலைகளை கடந்து செல்வதையும், கிராமத்திற்குள் புகுந்து மாடுகளை வேட்டையாடுவதையும் காண முடிகிறது.

இந்நிலையில், மாயாறு கிராமத்தில் உள்ள செல்வப்பா காலனி அருகே சுற்றித்திரியும் ஒரு புலி கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் குடியிருப்பு பகுதிக்கு அருகில் வந்து கால்நடைகளை வேட்டையாடி வருகிறது. நேற்று முன்தினம் மாலை மாயார் கால்வாய் பகுதியில் பதுங்கி இருந்த அந்த புலி, கிராமத்தின் முன் உள்ள பாலத்தின் அருகே கடமானை வேட்டையாடியது. அப்போது அந்த வழியாக சென்ற வாகனத்தை கண்டு செய்வது அறியாமல் திகைத்த புலி, பின்னர் அந்தக் கடமானை கால்வாயில் அருகே இருந்த புதருக்குள் இழுத்து சென்றது. இதனைக்கண்ட கிராம மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்தனர்.

# மாணவியர் விடுதிகளில் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் அண்ணாமலை

பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; “சென்னையில், அரசு சேவை இல்லத்தில் தங்கிப் படிக்கும் 13 வயது மாணவி, விடுதி காவலாளியால் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது, கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாமல், பெற்றோர்களிடையே அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழகம் முழுவதுமே, பெண்களுக்கு எதிரான பாலியல் தாக்குதல் வழக்குகள், திமுக அரசால் பொறுப்பின்றி கையாளப்படுவதன் விளைவு, சமூக விரோதிகளுக்கு சட்டத்தின் மீதும், காவல் துறையின் மீதும் சிறிதும் பயமில்லாமல் போய்விட்டது. ஒவ்வொரு குற்றம் நடைபெற்ற பிறகும், குற்றவாளியைப் பிடித்து விட்டோம் என்று பெருமை பேசிக் கொண்டிருக்கும் திமுக அரசு, குற்றம் நடக்காமல் தடுப்பதுதான் அரசின் முதல் கடமை என்பதை மறந்து போய்விட்டது.

உடனடியாக, தமிழகம் முழுவதும் உள்ள மாணவியர் விடுதிகளில், முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், பெண் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க.வில் உறுப்பினர் சேர்க்கை மந்தம் கட்சித் தலைமை அதிருப்தி




சென்னை ஜூன் 11

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 10 மாத இடைவெளியே இருக்கிறது. ஆளுங்கட்சியான தி.மு.க.வோ தொடர்ந்து 2வது முறையாக வெற்றி பெற்று 7வது முறையாக ஆட்சி அமைத்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டிவருகிறது. அந்த வகையில், கடந்த 1ந் தேதி மதுரையில் தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தை பிரமாண்டமாக கூட்டியது. இந்தக் கூட்டத்தில் பேசிய கட்சியின் தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தி.மு.க. நிர்வாகிகளுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். அதில் ஒன்று, தி.மு.க.வின் உறுப்பினர்களை 30 சதவீதம் உயர்த்துவது என்பதாகும்.

தி.மு.க.வில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 கோடியை கடந்துவிட்டதாக கடந்த ஆண்டு கட்சித் தலைமை அதிகாரபூர்வமாக அறிவித்தது. இந்த நிலையில், உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேலும் 30 சதவீதம் உயர்த்த வேண்டும். அதாவது, 60 லட்சம் உறுப்பினர்களை புதிதாக இணைக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க. தலைமையின் உத்தரவு ஆகும்.

இதுகுறித்து, தி.மு.க. பொதுக்குழுவில் பேசப்பட்டது. ஆனால், களநிலவரம் தி.மு.க. தலைமைக்கு அதிர்ச்சியான தகவலையே வழங்கியுள்ளது. தி.மு.க.வில் உறுப்பினர் சேர்க்க செல்லும் நிர்வாகிகள், அரசின் 4 ஆண்டு சாதனைகளை சொல்லி, திட்டங்களை பட்டியலிட்டு பொதுமக்களிடம் கட்சியில் இணையச் சொல்கிறார்களாம்.

ஆனால், பொதுமக்களில் ஒரு தரப்பினரோ, "அரசு பணத்தில்தான் ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை தருகிறீர்கள். அரசு பஸ்களில்தான் பெண்களுக்கு இலவச பயணம் தருகிறீர்கள்" என்று எதிர் கேள்விகளை கேட்டு தி.மு.க. நிர்வாகிகளை திக்குமுக்காட செய்கின்றனராம்.

இதனால், தி.மு.க.வில் உறுப்பினர் சேர்க்கை மந்தமாகவே நடந்து வருவதாக கூறப்படுகிறது. இந்த தகவலை கேட்டு அதிருப்தி அடைந்த கட்சித் தலைமை, கடந்த 7ந் தேதி தி.மு.க. மாவட்ட செயலாளர்கள், எம்.பி, எம்.எல்.ஏ.க்கள், தொகுதி பார்வையாளர்கள் கூட்டத்தை நடத்தியது. இந்த கூட்டத்தில் காணொலி காட்சி வழியாக கட்சியின் தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது, கட்சி நிர்வாகிகளிடம் உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த அறிவுறுத்தினார். 30 சதவீதம் உயர்த்தப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை

அப்படியே தேர்தல் நேரத்தில் வாக்காக மாற வேண்டும் என்று நிர்வாகிகளிடம் தி.மு.க.தலைமை அறிவுறுத்தி உள்ளது. தேர்தலுக்கு இன்னும் குறைந்த காலமே

இருப்பதால், அதற்குள் எப்படி இலக்கை எட்ட முடியும்? என்று தி.மு.க. நிர்வாகிகள் விழி பிதுங்கி நிற்கின்றனர்.

# திருத்தணி அரசு மருத்துவமனை மக்கள் பயன்படுத்தும் வகையில் செயல்படப்போவது எப்போது? சீமான்



சென்னை, ஜூன் 11

திருத்தணி அரசு மருத்துவமனையில் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்து மக்கள் பயன்பாட்டிற்காக விரைந்து இயங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கடந்த 2020ம் ஆண்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, மாவட்ட மருத்துவக் கல்லூரியாக மாற்றப்படுவதாக அறிவித்த தமிழ்நாடு அரசு, அதே ஆண்டு சட்டப்பேரவையில் திருத்தணி அரசு பொது மருத்துவமனையைத் தரம் உயர்த்த 45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தீர்மானமும்நிறைவேற்றி, ஒப்பந்தமும் விடப்பட்டது.

இதற்கிடையே தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க. அரசு அமைந்த பிறகு கடந்த ஏப்ரல் மாதம் காணொளிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் தரம் உயர்த்தப்பட்ட திருத்தணி மருத்துமனையைத் திறந்துவைத்தார். ஆனால், அதன்பிறகும் கடந்த இரு மாதங்களாக திருத்தணி அரசு மருத்துவமனை மருத்துவ உபகரணங்கள் மற்றும் மின்வசதி இல்லாத காரணத்தால் இன்னும்திறக்கப்படவில்லை. மக்கள் பயன்பாட்டுக்கு இல்லாத மருத்துவமனை யாருக்காக? எதற்காக? தரம் உயர்த்த தமிழ்நாடு அரசு வழங்குவதாக அறிவித்த 45 கோடி என்னானது?

தரம் உயர்த்தப்பட்ட மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரிகள், புதிதாகத் தொடங்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை தி.மு.க. அரசு ஏற்படுத்தவில்லை என்பது நிர்வாகச் சீர்கேட்டின் உச்சமாகும். வெற்று விளம்பரத்திற்குத் தரம் உயர்த்துவதாக வெற்று அறிவிப்புகளை வெளியிட்டுவிட்டு, மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகளைக் கூடத் தி.மு.க. அரசு நிறைவு செய்யாதிருப்பது கோடிக்கணக்கான ஏழை, எளிய மக்களின் உயிரோடும், உடல் நலனோடும் விளையாடும் கொடுஞ்செயலாகும்.

குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்தலைமை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்ட நிலையில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதியோ, மருத்துவர்கள் நியமனமோ செய்யப்படாத காரணத்தால் பயிற்சி மருத்துவர்களைக் கொண்டு இயங்கி வருவது அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. அதன் காரணமாக விழுப்புரம் சுற்றுவட்டார மக்கள் பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள ஜிப்மர் மருத்துவமனைக்குப் போகச்சொல்லி அலைகழிக்கப்படுவதும் அரங்கேறுகிறது. இதுகுறித்துப் பலமுறை பொதுமக்கள் புகாரளித்தும் தி.மு.க. அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் திராவிட மாடல் அரசின் சாதனையாகும்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரிகள் வரை போதிய அளவில் மருத்துவர்கள் இல்லை, செவிலியர்கள் இல்லை, மருந்துகள் இல்லை, மருத்துவ உபகரணங்கள் இல்லை, படுக்கை வசதி இல்லை என்பதால் தமிழக மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகிவரும் நிலையில், தரம் உயர்த்தப்பட்ட மருத்துமனைகளும் அதைவிட மிக மோசமான நிலையிலிருப்பது ஏற்க முடியாத பெருங்கொடுமையாகும். இத்தனை மோசமான நிர்வாகத்தை வைத்துக் கொண்டு 'இந்தியா வியக்கும் திராவிட மாடல், உலகம் வியக்கும் நான் காண்டு சாதனை' என்று தி.மு.க. அரசு பேசுவது வெட்கக்கேடானது.

ஆகவே, தமிழ்நாடு அரசு, தரம் உயர்த்தப்பட்ட திருத்தணி அரசு மருத்துவமனையில் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்து மக்கள் பயன்பாட்டிற்காக விரைந்து இயங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவலியுறுத்துகிறேன். மேலும், விழுப்புரம் மருத்துவக் கல்லூரி உட்பட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரிகள் வரை மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் பற்றாக்குறையைப்போக்கி, மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட தேவைகளைநிறைவேற்றி தமிழ்நாட்டு மக்களின் உயிர்காக்க உடனடி நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை கோவில் குளத்தை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் ஐகோர்ட்டு அதிரடி உத்தரவு




சென்னை, ஜூன் 10

திருவண்ணாமலையில் உள்ள பிரசித்தி பெற்ற அண்ணாமலையார் கோவில்தாமரைகுளத்தை சுற்றி நான்கு பக்கங்களிலும் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த ஆக்கிரமிப்பு கட்டிடங்களில் இருந்து கழிவுகள் குளத்தில் திறந்துவிடப்படுவதாகவும் கூறி வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தொடர்ந்தார்.

இந்தவழக்குஐகோர்ட்டு தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம், நீதிபதி சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஆக்கிரமிப்புகளை அரசு கண்டறிந்து 46 வாரங்கள் கடந்தும் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்ட நீதிபதிகள், இந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். பொதுவாகவே ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்திய நீதிபதிகள், திருவண்ணாமலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியை கண்காணிப்பதற்காக ஓய்வுபெற்ற ஐகோர்ட்டு நீதிபதி கோவிந்தராஜனை நியமனம் செய்துள்ளனர். ஆக்கிரமிப்புகளை அகற்றியது குறித்து அரசு அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதிகள், ஆக்கிரமிப்பு கட்டிடங்களுக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் மின்சார இணைப்பு வழங்கப்பட்டது என்பது குறித்து மின்சார வாரியம் தனியாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று அதிரடியாக உத்தரவிட்டு, இந்த வழக்கின் விசாரணையை வரும் 26ந்தேதிக்கு தள்ளி வைத்தனர்.

# மூதாட்டி கொலை: யாரையோ கைது செய்து திமுக அரசு நாடகமா? நயினார் நாகேந்திரன் கேள்வி



சென்னை, ஜூன் 11

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் அருகே தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த சாமியாத்தாள் என்ற மூதாட்டி நகைக்காக கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியளிக்கிறது. அவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொங்குப் பகுதிகளில் இதுவரைநடந்தஅனைத்து கொலை, கொள்ளைகளுக்கும் காரணமானவர்களைக்கண்டுபிடித்துகைது செய்துவிட்டோம் என திமுக அரசு ஒருபுறம் மார்தட்டிக் கொண்டிருக்க, அதே பகுதியில் அதே பாணியில் மீண்டுமொரு கொலை அரங்கேறியுள்ளது, மக்களை குழப்பத்திலும் அச்சத்திலும் ஆழ்த்தியுள்ளது.

தங்கள் நிர்வாகத் தோல்வியை மறைக்கவும் மக்களின்கண்டனக்குரல்களை ஒடுக்கவும் யாரையோ கைது செய்துவிட்டு குற்றவாளி அகப்பட்டுவிட்டதாக திமுக அரசு நாடகமாடுகிறதா? என்ற சந்தேகமும் மக்கள் மனதில் வலுக்கிறது.

எனவே, தமிழகத்தில் குறிப்பாக கொங்குப் பகுதிகளில் பெருகி வரும் கொலை, கொள்ளை குற்றங்களின் மூளையாக செயல்படுவோர் யார் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு தக்க தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை தமிழ்நாடு பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# த.வெ.க.வில் 7ம் கட்டமாக 6 மாவட்ட பொறுப்பாளர்கள் நியமனம் விஜய் அறிவிப்பு



சென்னை, ஜூன் 11

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகிறது. தமிழக அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகமும் தேர்தலை சந்திக்க தீவிரம் காட்டி வருகிறது. இதற்கான முன்னெடுப்புகளை தமிழக வெற்றிக்கழகம் மேற்கொண்டுள்ளது.

தற்போது கட்சியின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகளை விஜய் முழு வீச்சில் செய்து வருகிறார். இதன்படி விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் படிப்படியாகக் கட்சி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இதுவரை 6 கட்டங்களாக 114 கழக மாவட்டங்களுக்கு மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், த.வெ.க.வில் 7ம் கட்டமாக 6 கழக மாவட்டங்களுக்கு, கழக விதிகளின்படி மாவட்ட பொறுப்பாளர்களை நியமித்து அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;

"தமிழக வெற்றிக் கழகத்தில் 7ம் கட்டமாக 6 கழக மாவட்டங்களுக்கு, கழக விதிகளின்படி மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிதாக பொறுப்பேற்கும் நிர்வாகிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய நிர்வாகிகளுக்கு கழகத் தோழர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு விஜய் தெரிவித்துள்ளார்.

# பாளையங்கோட்டை ரெயில் நிலையத்தில் இந்தி எழுத்து அழிப்பு 7 பேருக்கு அபராதம்




நெல்லை, ஜூன் 11

மத்திய அரசு மும்மொழி கொள்கை என்ற பெயரில் தமிழகத்தில் இந்தியை திணிக்க முயற்சிப்பதாக தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதனிடையே, கடந்த பிப்ரவரி மாதம், மத்திய அரசின் மும்மொழி கொள்கைக்குஎதிர்ப்புதெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நெல்லை பாளையங்கோட்டை ரெயில் நிலையத்தில்உள்ளபெயர் பலகையில் இருக்கும் இந்தி எழுத்துகளை அழித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில், நெல்லை பாளையங்கோட்டை ரெயில் நிலையத்தில் பெயர் பலகையில் இருந்த இந்தி எழுத்துகள் அழிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக 7 பேருக்கு தலா ரூ.10,000 அபராதம் அல்லது சிறை தண்டனை விதித்து நெல்லை கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

# திருப்பத்தூர்: நீர்த்தேக்கத்தில் குளிக்கச்சென்ற வாலிபர் சடலமாக மீட்பு



திருப்பத்தூர், ஜூன் 11

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஏழைகளின் ஊட்டி என அழைக்கப்படும் ஏலகிரி மலைக்கு

சென்னையை சேர்ந்த 8 இளைஞர்கள்கடந்த சனிக்கிழமை சுற்றுலா வந்துள்ளனர். சுற்றுலா பயணத்தை முடித்துக் கொண்டு அருகில் இருக்கக்கூடிய ஆண்டியப்பனூர்ஓடைநீர்தேக்கத்திற்கு சென்று உள்ளனர்.

அங்கே நண்பர்கள் 8 பேரும் நீரில் விளையாடி கொண்டு இருந்த போது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞரின் உதவியாளராக பணியாற்றி வந்த சென்னை அமிஞ்சிக்கரைபகுதியைச் சேர்ந்த சங்கர் மகன் விஜயகுமார்(வயது 22), நீரில் மூழ்கி மாயமானார்.

சம்பவம் குறித்து உடன் வந்த நண்பர்கள் குரிசிலாப்பட்டு காவல்துறைக்கு தகவல் கொடுத்துள்ளனர். தகவலின் பேரில் குரிசிலாப்பட்டு காவல்துறையினர் திருப்பத்தூர் மற்றும் ஆலங்காயம் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலின்பேரில் தீயணைப்புத் துறையினர் கடந்த இரண்டு நாட்களாக உடலை தேடி வந்தனர். இருப்பினும் மாயமான இளைஞர் விஜயகுமார் உடல் கிடைக்காத நிலையில் மூன்றாவது நாளான இன்று சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்ட ஸ்கோப் நீரில் உள்ளே சென்று தேடும் டீம் வரவழைக்கப்பட்டு உடலை தேடும் பணி தீவிரப்படுத்தினர்.

தீயணைப்புத் துறையினர் தேடண்டு வேட்டையில் ஈடுபட்டு கொண்டிருக்கிறபோதுவிஜயகுமார் உடல் தானாகவே நீரிலிருந்து வெளிய வந்து கரை ஒதுங்கியது. இதனால் உடலை மீட்டு குரிசிலாப்பட்டு போலீசாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் பிரேதத்தை பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து குரிசிலாப்பட்டு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டுநரை காலணியால் அடித்த விவகாரம்: அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, ஜூன் 11

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில், எந்தத் தவறும் செய்யாத அரசுப் போக்குவரத்துக்கழக ஓட்டுனரை அரசுப் போக்குவரத்துக்கழக உதவி மேலாளர் காலணியால் அடித்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. அதற்குக் காரணமாக உதவி மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசும், காவல்துறையும் அவரை காணொலியில் மன்னிப்புக் கேட்கச் சொல்லி விட்டு ஒதுங்கியிருப்பது அதைக் விடக் கொடுமையானது. போக்குவரத்துக்கழகம் மற்றும் காவல்துறையின் இந்த அணுகுமுறை கண்டிக்கத்தக்கது.

பாதிக்கப்பட்ட அரசு பேருந்தின் ஓட்டுனர் எந்தத் தவறும் செய்யவில்லை. மாறாக, பேருந்தை இயக்கும் படி பயணிகள் கோரிய போது உயரதிகாரியான மேலாளர் ஆணையிட்டால் தான் இயக்க முடியும் என்றுகூறியுள்ளார். இதில் எந்தத் தவறும் இல்லை. இது தொடர்பாக உதவி மேலாளரிடம் பயணிகள் முறையிட்ட போது, பயணிகளை தரக்குறைவாக பேசிய உதவி மேலாளர், சம்பந்தப்பட்ட ஓட்டுனரை தாம் அணிந்திருந்த காலணியால் அடித்திருக்கிறார். இது மன்னிக்க முடியாத குற்றம்.


ஓட்டுனரை உதவி மேலாளர் காலணியால் தாக்கும் காணொலி வைரலாகி வரும் நிலையில், அதனடிப்படையில் விசாரணை நடத்தி உதவி மேலாளர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஓட்டுனர் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக நடந்த நிகழ்வுக்கு மன்னிப்புக் கேட்பதாக உதவி மேலாளரை காணொலி வெளியிடச் செய்திருக்கிறது அரசு. இது அப்பட்டமான கட்டப்பஞ்சாயத்து என்பதைத் தவிர வேறில்லை.

பொதுமக்கள் மத்தியில் ஒருவரை எவரேனும் காலணியால் தாக்கும்பட்சத்தின் அவர் காணொலியில் மன்னிப்பு கேட்டால் போதுமானது என்றால், பலரும் முன்கூட்டியே மன்னிப்பு காணொலிகளை பதிவு செய்து வைத்து விட்டு, யாரை வேண்டுமானாலும் காலணியால் தாக்குவார்கள். இப்படி ஒரு சூழலைத் தான் தமிழக அரசு, போக்குவரத்துக் கழகம், காவல் துறை ஆகியவை விரும்புகின்றனவா? என்பதை அரசு விளக்க வேண்டும்.

அரசின் கடமை நிர்வாகம் செய்வது தான், கட்டப் பஞ்சாயத்து செய்வதில்லை என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ஓட்டுனர் தாக்கப்பட்டதற்கு காரணமான உதவி மேலாளர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறிய அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பழமைவாத கருத்தை கீதா ஜீவன் ஆதரிக்கிறாரா...? வானதி சீனிவாசன் கேள்வி



சென்னை, ஜூன் 11

தமிழக பா.ஜ.க. எம்.எல்.ஏவானதிசீனிவாசன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

தமிழகத்தில் குழந்தை திருமணங்கள் மற்றும் போக்சோ வழக்குகள் தொடர்ந்து அதிகரிப்பதற்கு காரணமே, பதின்ம வயதில் காதல் வயப்படுவது தான்" எனக் கூறியுள்ள தி.மு.க அமைச்சர் கீதா ஜீவன் அவர்களின் விட்டேத்தியான பேச்சு ஏற்புடையதல்ல, கடும் கண்டனத்திற்குரியது.

18 வயதிற்கு கீழேயுள்ளவர்கள் சட்டத்தின் பார்வையில் குழந்தைகள் என்ற பட்சத்தில், காதல் மொழி பேசியோ அல்லது கத்தியைக் காட்டி மிரட்டியோ அவர்களைப் பாலியல் இச்சைகளுக்கும் திருமணங்களுக்கும் உட்படுத்துவதும் சட்டப்படி குற்றம் தானே? அதை ஒரு அரசு அமைச்சர் எப்படி நியாயப்படுத்தலாம்? ஒருவேளை "முள்ளு மேல சேலை பட்டாலும், சேலை மேல முள்ளு பட்டாலும் சேதாரம் சேலைக்குத் தான்" என்ற பிற்போக்குத்தனமான பழமைவாத கருத்தை கீதா ஜீவன் அவர்கள் ஆதரிக்கிறாரா?

தங்களின் நிர்வாகத் தோல்வியை மறைக்க பாதிக்கப்பட்டவர்களையே குறை சொல்லி குற்றவாளி கூண்டில் ஏற்றுவது தி.மு.கவின் வாடிக்கை என்றாலும், அதிகாரப் பொறுப்புமிக்க ஒருபெண்அமைச்சரும் அதே வழியை பின்பற்றுவது ஆபத்தானது.

மேலும், கடந்த நான்காண்டுகளாக பள்ளிகள், கல்லூரிகள் உட்பட தமிழகத்தில் நாளுக்கு நாள் பெருகி வரும் பாலியல் வன்கொடுமைகளைக் காணும் ஒன்றும் அறியா பாமர மக்கள், தங்கள் பெண் பிள்ளைகளைப் படிக்க வைக்கத் துணிவார்களா அல்லது மண முடித்து கொடுத்து கடமையை கழித்தால் போதும் என்றத் தவறான முடிவினை எடுப்பார்களா? இது தி.மு.க அரசின் நிர்வாகத் தோல்வி தானே?. ஆக, தமிழகத்தில் தலைவிரித்தாடும் பாலியல் குற்றங்களை ஒடுக்கி, பெண் பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் குழந்தைத் திருமணம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, குழந்தை திருமணம் செய்யத் துணியும் குற்றவாளிகள் மீதும் பாலியல் குற்றவாளிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அறிவாலய அரசின் தலையாய கடமை. ஆனால் அதை விட்டுவிட்டு, அதிகரிக்கும் குழந்தை திருமணங்களும் பாலியல் குற்றங்களும் ஆளும் அரசின் தவறல்ல என்பது போல கண்டு கொள்ளாமல் கடந்து விட நினைப்பது உண்மையில் அருவருக்கத்தக்கது. இவ்வாறு அதில் தெரிவிக்கப் படுள்ளது.

# பிளஸ்1 மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கலாம்




சென்னை, ஜூன் 11

அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"நடப்பாண்டு மார்ச் மாதம் பிளஸ்1 பொதுத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல்கோரிவிண்ணப்பித்த மாணவர்கள் தங்களது விடைத்தாள் நகலை இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் www.dge.tn.gov.inஎன்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த இணையதளத்தில் நோடிபிகேசன் பகுதியில் 'எச்.எஸ்.இ. முதலாம் ஆண்டு தேர்வு, மார்ச் 2025 ஸ்கிரிப்ட்ஸ் டவுன்லோடு' என்ற வாசகத்தை கிளிக் செய்ய வேண்டும். அப்போது தோன்றும் பக்கத்தில் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்யலாம்.

மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால் அதே இணையதளத்தில் வெற்று விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

பின்னர், விண்ணப்பத்தை பூர்த்தி செய்து நாளை முதல் 13ந்தேதி வரை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குனர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுமதிப்பீட்டுக்கு பாடம் ஒன்றுக்கு ரூ.505ம், மறுகூட்டலுக்கு உயிரியல் பாடத்திற்கு ரூ.305ம், ஏனைய பாடங்களுக்கு தலா ரூ.205ம் கட்டணமாக செலுத்த வேண்டும். கட்டணத்தை மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குனர் அலுவலகத்தில் பணமாக செலுத்தலாம்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'டெல்லியை போல் தமிழ்நாட்டில் விளையாட முடியாது' அமித்ஷா பேச்சுக்கு திருமாவளவன் பதிலடி



மதுரை, ஜூன் 11

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா நேற்று மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் தலைநகர் டெல்லியில் நடந்ததுபோல் தமிழ்நாட்டிலும் ஆட்சி மாற்றம் நிகழும் என்று தெரிவித்தார். இந்நிலையில், அமித்ஷாவின் பேச்சு குறித்து மதுரையில் இன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த போது அவர் கூறியதாவது; "ஆட்சிமாற்றம் என்பது அமித்ஷாவின் கனவாக இருக்கலாம். டெல்லியில் விளையாடியதுபோல்தமிழ்நாட்டில் விளையாட முடியாது. வட இந்தியா வேறு, தென் இந்தியா வேறு. டெல்லி வேறு, தமிழ்நாடு வேறு. தமிழ்நாடு சமூக நீதிக்கான மண் என்பது இந்தியா அறிந்த உண்மை.

ஆனாலும் தமிழ்நாட்டை டெல்லியை போல், மராட்டிய மாநிலத்தை போல் ஆக்கிவிடலாம் என்று அவர்கள் முயற்சித்து பார்க்கிறார்கள். ஆனால் அதை இந்த மண்ணில் அரசியல் முதிர்ச்சி அடைந்த தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்."

இவ்வாறு திருமா வளவன் தெரிவித்தார்.

# சிவகங்கை: தனியார் பள்ளி மாணவி மாடியிலிருந்து குதித்து தற்கொலை முயற்சி

சிவகங்கை, ஜூன் 11

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் அமைந்துள்ள குட்வில் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு படிக்கும் மாணவி இன்று காலையில் 7. 30 பள்ளிக்கு வந்த மாணவி சுமார் ஒரு எட்டு மணி அளவில் வகுப்பறை நடந்து கொண்டிருந்தத போது அப்பொழுது பள்ளியின் இரண்டாவது மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார். இதில் பலத்த காயம் அடைந்த மாணவி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று உள்ளனர்.

ஒன்பது மணிக்கு திறக்க வேண்டிய பள்ளியை 7:30 மணிக்கு திறப்பது மற்றும் மாணவிகளுக்கு அதிக பணிச்சுமையை கொடுப்பது காரணமாக இருக்குமா? தற்போது தான் பள்ளி திறந்து உள்ளது திறந்த உடனே ஸ்பெஷல் கிளாஸ் என்ற பெயரில் தனியார் பள்ளிகள் மாணவிகளுக்கு அதிகமாக சுமையை கொடுப்பதனால் இந்த விபத்து ஏற்பட்டு இருக்குமா? வேறேனும் வீட்டில் பிரச்சனை எதுவும் நடந்திருக்குமா? என்பது போன்ற பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இருப்பினும் தனியார் பள்ளிகளில் அதிகாலைகளையே மாணவிகளுக்கு ஸ்பெஷல் கிளாஸ் என்ற பெயரில் வைத்து மாணவிகளுக்கு அதிக அழுத்தம் கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு நிதியுதவி: முதல்வர் அறிவிப்பு

சென்னைஜூன் 11

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், தி.அத்திப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சஞ்சீவி நித்யா தம்பதியரின் மகன் தாரகேஷ் (10 வயது) என்பவர் மேற்படி கிராமத்திலுள்ள பெரிய ஏரியில் உறவினர்களுடன் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (11.6.2025)

**மேஷம்** — முதலீடுகள் நன்மை தரும்; ஆனால் முடிவெடுக்க தயக்கம் தேவை. குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்கும்.

**ரிஷபம்** — சொத்து முதலீடுகள் வாய்ப்பு அதிகம்; கடன்தவிர்க்கவேண்டியது அவசியம். பணியிட சிக்கல்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

**மிதுனம்** — புதியவாய்ப்புகள்மற்றும்ஊடகத்தில் முன்னேற்றம் காணப்படும். உறவுகளில் கவனம் தேவை.

**கடகம்** — செலவுகள் அதிகரிக்கும், ஆனால் திட்டமிடல்மூலம்நன்மைகிடைக்கும். உணர்ச்சி மற்றும் மன அழுத்தம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்** — பிரியமான வேலையிலும் உடல் நலம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் ஆதிக்கம் காட்டும் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் இது.

**கன்னி** — எதிர்பார்த்த லாபம் பெறும், ஆனால் செலவு கட்டுப்பாடு தேவை. பழைய நோய்கள் மீண்டும் தோன்றலாம்.

**துலாம்** — முன்பே செய்த முதலீடுகள் லாபம் தரும் நிலையில் இருக்கும். பணியிடத்தில் அதிகப்படியான பணிச்சுமையால் மனக்கவலை அதிகரிக்கும்.

**விருச்சிகம்** — தொழிலில் புதிய முயற்சிகள் விருப்பமாக அமையும், ஆனால் நிதியான அணுகுமுறை அவசியம். உறவுகளில்நெருக்கம்அதிகரிக்கும்.

**தனுசு** — தன்னம்பிக்கை அதிகரிக்கும், செலவு கட்டுப்பாடு தேவை. குடும்பத்தில்சவால்கள்ஏற்படலாம்.

**மகரம்** — தொழிலில் தடைகளை கடந்து நிம்மதிக்கு செல்வது. பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்** — அந்நிய முதலீடுகள் வாய்ப்பு, திட்டமிடல் தேவை. குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்கும்.

**மீனம்** — தொழிலில் சுமை அதிகரிக்கும், நிதி பலவீனம், கடன்தவிர்க்கவேண்டிய நிலை. ஆன்மீக விழிப்புணர்வு அதிகரிக்கும்.

# அமைச்சர் மு.பெ. சாமிநாதன் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார்



ஈரோடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முகாசிபிடாரியூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 202526 ன் கீழ் ரூ.3.51 இலட்சம் மதிப்பீட்டில் முகாசிப்பிடாரியூர் ஊராட்சி, ஜெய்சக்தி நகரில் ஓர் அடுக்கு கப்பி சாலை அமைத்தல், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2025-26 ன் கீழ் ரூ.14.25 இலட்சம் மதிப்பீட்டில் பெருந்துறை சாலை ஈரோடு சென்னிமலை சாலை (வழி) அர்த்தனாரிபாளையம் பள்ளி வரை தார்ச்சாலை அமைத்தல், ரூ.10.75 இலட்சம் மதிப்பீட்டில் பெருந்துறை காங்கயம் சாலை முதல் முதன்மை சுகாதார வருவாய் (வழி) முகாசிப்பிடாரியூர் பஞ்சாயத்து அலுவலகம் வரை தார்ச்சாலை அமைத்தல், ரூ.41.16 இலட்சம் மதிப்பீட்டில் பெருந்துறை காங்கயம் சாலை முதல் சென்னிமலை மார்க்கெட் சாலை வரை தார்ச்சாலை அமைத்தல் மற்றும் முகாசிபிடாரியூர் ஊராட்சியில் ரூ.30.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் திறப்பு விழா என மொத்தம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் 4 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி. 1 முடிவுற்ற திட்டப்பணியை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) அர்பித் ஜெயின் இஆப., முன்னாள் ஊராட்சி தலைவர், திமுக நிர்வாகிகள், ஊராட்சி செயலர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கர்ப்பமாக இருப்பதாக பரவிய வதந்தி மவுனம் கலைத்த பாடகி கெனிஷா



பாடகி கெனிஷா பிரான்சிஸ், சமீபத்திய பேட்டியில் தன்னைப் பற்றிய வதந்திகளுக்கு பதிலளித்தார்.

நடிகர் ரவி மோகன் தனது மனைவி ஆர்த்தி ரவியை விவாகரத்து செய்யும் நிலையில் உள்ளார். ரவிக்கும் ஆர்த்திக்கும் இடையிலான பிளவுக்கு பாடகி கெனிஷாதான் காரணம் என்று அவரைக் குறை கூறி வரும்நிலையில், தற்போது அவர் கர்ப்பமாக இருப்பதாகவும் இணையத்தில் வதந்திகள் பரவி வருகின்றன.

இந்நிலையில், சமீபத்திய பேட்டியில், கெனிஷா இதற்கு கண்டனம் தெரிவித்தார். அவர் கூறுகையில், "நான் கர்ப்பமாக இருப்பதாக பலர் கூறுகிறார்கள். எனக்கு சிக்ஸ் பேக் கிடையாது, அதேபோல் நான் கர்ப்பமாகவும் இல்லை' என்றார்

கெனிஷா சமீபத்தில் தனது இசை வீடியோ ''அன்றும் இன்றும்''ல் இருந்து ஒரு புகைப்படத்தை வெளியிட்டிருந்தார். இந்த புகைப்படத்தை பார்த்து பலர் கெனிஷா கர்ப்பமாக இருப்பதாக இணையத்தில் பேச தொடங்கினர்.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்... இங்கிலாந்து முன்னணி வீரர் காயம்..?



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற 20ம் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணியின் கேப்டனாக சுப்மன் கில்லும், துணை கேப்டனாக ரிஷப் பண்டும் செயல்பட உள்ளனர்.

இந்த தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி கடந்த 6ம் தேதி இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றது. தற்போது அங்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் இடம் பிடித்திருந்த முன்னணி வீரரான ஜோஷ் டங் காயத்தை சந்தித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய ஏ அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்காக ஆடி வரும் ஜோஷ் டங் காயத்தை சந்தித்ததாக கூறப்படுகிறது. அவரது காயம் குறித்து எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. ஏற்கெனவே ஆர்ச்சர், அட்கின்சன் ஆகியோரும் காயம் காரணமாக இந்த அணியில் இடம்பெறாத நிலையில், ஜோஷ் டங்க்கும் காயத்தை சந்தித்துள்ளது இங்கிலாந்து அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# தேதியை அவர்கள்தான் முடிவு செய்கிறார்கள், நாங்கள் இல்லை...ஓடிடியை சாடும் ''குபேரா'' தயாரிப்பாளர்




'குபேரா' படத்தை ஜூலை மாதம் வெளியிட கோரிய நிலையில், ஜூன் 20ம் தேதியே வெளியிட ஓடிடி தளம் வலியுறுத்தியதாகவும், தாமதமானால் தொகையில் இருந்து ரூ.10 கோடி குறைக்கப்படும் என்று எச்சரித்ததாகவும் தயாரிப்பாளர் சுனில் நரங் தெரிவித்திருக்கிறார்.

தனுஷ் , ராஷ்மிகா மந்தனா, நாகார்ஜூனா உள்ளிட்டோர் நடித்த 'குபேரா' படம் வெளியீட்டிற்கு தயாராகி வரும் நிலையில், ஓடிடி தளங்களை தயாரிப்பாளர் சுனில் நரங் சாடி இருக்கிறார்.

அவர் கூறுகையில், "ஓடிடி தளங்கள் ரிலீஸ் தேதியை முடிவு செய்கின்றன. ஜூலை மாதத்தில் ஒரு தேதியைக் கேட்டோம். ஆனால் அவர்கள் ஜூன் 20 அன்று வெளியிடச் சொன்னார்கள். இல்லையென்றால், ஒப்புக்கொண்ட தொகையிலிருந்து 10 கோடியைக் குறைப்பதாகச் சொன்னார்கள்.

இப்போது, இந்த தளங்களை நம்பி நாங்கள் திரைப்படங்களை உருவாக்குகிறோம். மெதுவாக, அவர்கள் சினிமாவின் ராஜாக்களாக மாறி வருகின்றனர். படம் வெற்றி பெற்றாலும் இல்லாவிட்டாலும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்" என்றார்.

# டி.என்.பி.எல்.: டாஸ் வென்ற நெல்லை பந்துவீச்சு தேர்வு



9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரின் முதற்கட்ட லீக் சுற்று ஆட்டங்கள் கோவையில் உள்ள எஸ்.என்.ஆர். கல்லூரி மைதானத்தில் நடந்து வருகிறது. இதில பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்த தொடரில் இன்று இரவு 7.15 மணிக்கு தொடங்கும் 6வது லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர்கில்லீஸ் நெல்லை ராயல் கிங்ஸ் அணிகள் மோதுகின்றன. சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி தனது தொடக்க ஆட்டத்தில் 8 விக்கெட் வித்தியாசத்தில் திருப்பூர் தமிழன்சை வீழ்த்தி இருந்தது.

மறுபுறம் நெல்லை ராயல் கிங்ஸ் அணி தனது முதல் ஆட்டத்தில் திருச்சி கிராண்ட் சோழாஸை வீழ்த்தி தொடரை வெற்றியோடு தொடங்கியது. தற்போது இரு அணிகளும் 2வது வெற்றிக்கு குறி வைத்துள்ளதால் இந்த ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இதையடுத்து இந்த ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற நெல்லை அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்துள்ளது.

# அக்சய் குமார் சொன்ன அட்வைஸ்...பகிர்ந்த நடிகை சவுந்தர்யா சர்மா



பல் மருத்துவராக இருந்து தற்போது நடிகையாக மாறி இருப்பவர் சவுந்தர்யா சர்மா. பிக் பாஸ் 16ல் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிய பிறகு, தற்போது அவர் ''ஹவுஸ்புல் 5'' என்ற நகைச்சுவை பொழுதுபோக்கு திரைப்படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமாகி இருக்கிறார்.

இந்தப் படத்தில் ''லூசி'' என்ற கேரக்டரில் நடிகை சவுந்தர்யா சர்மா நடித்து நல்ல வரவேற்பு பெற்றார். இந்நிலையில், சவுந்தர்யா ஷர்மா, அக்சய் குமார் தனக்கு வழங்கிய முக்கியமான அட்வைஸை பற்றி பகிர்ந்து கொண்டார்.

அதன்படி, "தொடர்ந்து உழைத்து கொண்டே இருங்கள். அது உங்களுக்கு பலனளிக்கும். பேசுபவராக இருப்பதை விட நன்றாக கேட்பவராக இருங்கள்" என்று அக்சய் குமார் கூறியதாக சவுந்தர்யா கூறினார்.

# விஜய் சங்கர், ஸ்வப்னில் சிங் அதிரடி... சேப்பாக் சூப்பர் கில்லீஸ் 212 ரன்கள் குவிப்பு



9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரின் முதற்கட்ட லீக் சுற்று ஆட்டங்கள் கோவையில் உள்ள எஸ்.என்.ஆர். கல்லூரி மைதானத்தில் நடந்து வருகிறது. இதில பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும். இந்த தொடரில் நடைபெற்று வரும் 6வது லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் நெல்லை ராயல் கிங்ஸ் அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற நெல்லை அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து சேப்பாக் அணியின் தொடக்க வீரர்களாக கே ஆஷிக் மற்றும் மொஹித் ஹரிஹரன் ஆகியோர் களம் இறங்கினர். இதில் மொஹித் ஹரிஹரன் 2 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து களம் கண்ட பாபா அபராஜித் 41 ரன்னில் அவுட் ஆனார். நிலைத்து நின்று ஆடிய ஆஷிக் அரைசதம் அடித்த அசத்திய நிலையில் 54 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து விஜய் சங்கர் மற்றும் ஜெகதீசன் ஜோடி சேர்ந்தனர். இதில் ஜெகதீசன் 13 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து ஸ்வப்னில் சிங் களம் இறங்கினார். விஜய் சங்கர் ஸ்வப்னில் சிங் ஜோடி அதிரடியாக ஆடி ரன்கள் சேர்த்தது. இருவரும் சிக்சர் மழை பொழிந்தனர். இதில் ஸ்வப்னில் 14 பந்தில் 45 ரன் எடுத்து அவுட் ஆனார். இறுதியில் சேப்பாக் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டை இழந்து 212 ரன்கள் எடுத்தது. சேப்பாக் தரப்பில் அதிகபட்சமாக ஆஷிக் 54 ரன்கள் எடுத்தார். நெல்லை தரப்பில் யுதீஷ்வரன் 3 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 213 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நெல்லை அணி ஆட உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.